**சௌத்ஆம்ப்டன் பல்கலைக்கழகம் (University of Southampton) வெளிநாட்டு மாணவர்களை வரவேற்கிறது!**

<u>எம்மைப் பற்றி</u>

சௌத்ஆம்ப்டன் பல்கலைக்கழகம் (University of Southampton) 1862ஆம் ஆண்டு நிறுவப்பட்டது (துவக்கத்தில் ஹார்ட்லே இன்ஸ்டிடியுட் என அறியப்பட்டது), இன்று யு கேவின் முன்னணிப் பல்கலைக்கழமாகத் திகழ்கிறது, பெருமைக்குரிய ரஸ்ஸல் (யுகேவில் முன்னிலையில் உள்ள 20 ஆய்வுப் பல்கலைக்கழகங்கள் ) குழுவின் உறுப்பினராக இருக்கிறது , உலகின் தலையாய 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றெனத் தரப்படுத்தப்பட்டுள்ளது (உலகப் பல்கலைக்கழகத் தரங்களுக்கான தி டைம்ஸ் மேநிலைக் கல்வி இணைப்பு ) (The Times Higher Education Supplement World University Rankings).

சௌத்ஆம்ப்டனில் வசிப்பதும் கற்பதும் தனிச்சிறப்பான , ஆர்வமூட்டுகிற ஒரு அனுபவமாகும் . எமது அதிநவீன வசதிகளும் ஆதரவான சூழலும் சேர்ந்து, ஒருவரின் சொந்த வெற்றிக்கும் எதிர்காலத்தில் சிறப்பான வாய்ப்புகளுக்கும் உகந்த ஈர்க்கத்தக்க ஊட்டமாக அமைகிறது.

ஐரோப்பிய யூனியனிலிருந்து 1,400 மாணவர்கள், ஐரோப்பிய யூனியனுக்கு வெளியே 130க்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளிலிருந்து 3,400 வெளிநாட்டு மாணவர்கள் என 22,000 மாணவர்களைக் கொண்ட சௌத்ஆ ம்ப்டன் பல்கலைக்கழகம் உண்மையிலேயே ஒரு பன்முகப்பட்ட மற்றும் பன்னாட்டுப் பல்கலைக்கழகம் ஆகும்.

<u>அமைவிடம்</u>

இங்கிலாந்தின் தென் கடலோரத்தில், மத்திய லண்டன் மற்றும் ஹீத்ரூ விமான நிலையத்திலிருந்து (Heathrow Airport) ஒரு மணிநேரப் பயணத் தொலைவில், திறந்து பரந்த ஊரகப் பகுதிகளை எளிதாக எட்டக்கூடிய சிறப்பான இடத்தில் அமைந்துள்ளது பல்கலைக்கழகம் . சௌத்ஆம்ப்டனில் எமக்கு ஐந்து வளாகங்கள் உள்ளன, வின்செஸ்டரில் ஒரு வளாகம் உள்ளது, இங்குதான் மாணவர்கள் தங்கவைக்கப்படுகிறார்கள்.

சௌத்ஆம்ப்டன் தலையாய சர்வதேசத் துறைமுகமாகத் தொடர் ந்து விளங்குகிறது, துடிப்பும் உயிர்ப்பும் கொண்ட நக ரமாகத் திகழ்கிறது . Winchester, Salisbury, Bournemouth ஆகிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நகரங்களும், New Forest மற்றும் உலகப் புகழ்பெற்ற Stonehenge ஆகியவையும் அருகில் உள்ளன . பல்கலைக்கழகத்தின் பேருந்துச் சேவை (Uni-*link*), சௌத்ஆம்ப்டனில் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களுக்கு இடையிலு ம், மத்திய நகரம் மற்றும் போ◌ெக்குவரத்து மையங்களுக்கு இடையிலும் நம்பகமான மற்றும் குறுகிய கால இடைவெளியிலான இணைப்பை வழங்குகிறது.

*Last updated on 20/08/2010*

எமது கலைத்துறை மாணவர்கள், இங்கிலாந்தின் புராதன தலைநகரான Winchester உள்ள விடுதிகளில் தங்க வைக்கப்படுகிறார்கள். சுமார் 38,000 பேர் வசிக்கின்ற இப்பகுதி, யுகேவில் வசிக்கத்தகுந்த இடங்களில் மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாகத் தேர்வு பெற்றுள்ளது.

## வெளிநாட்டு மாணவர்களுக்கு ஆதரவு

படிக்க அல்லது ஆய்வு செய்ய வெளிநாடுகளிலிருந்து யுகே வருவது என்பது பெரியதொரு பொறுப்பாகும். வெளிநாட்டு மாணவர்கள் இயன்ற அளவுக்கு விரைவாக தமது புதிய சூழலுக்கு மாறிக்கொள்ளவும், சௌத்ஆம்ப்டன் பல்கலைக்கழகத்தில் அவர்கள் செலவு செய்யும் காலத்தில் அதிகபட்சப் பயன்களைப் பெறவும் பல்கலைக்கழகத்தில் உள்ள பன்னாட்டு அலுவலகமும் இதர அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து உதவி செய்கின்றன.

வெளிநாட்டு (ஐரோப்பிய யூனியன் அல்லாத நாடுகளின்) மாணவர்களுக்கு அவர்களின் கல்விக்காலம் முழுவதிலும் எமது ஹால்ஸ் ஆ:ப் ரெசிடன்சில் (Halls of Residence) தங்கும் வசதி உறுதி செய்யப்படுகிறது (விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது). ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் புதிய மாணவர்களுக்கு ஹீத்ரூ விமான நிலையத்தில் இலவச சந்திப்பு மற்றும் வாழ்த்துச் (Meet and Greet) சேவையையும், சர்வதேச வரவேற்பு வாரத்தையும் பல்கலைக் கழகத்தின் பன்னாட்டு அலுவலகம் ஏற்பாடு செய்கிறது. பல்கலைக்கழகத்தின் விசா குழு வழங்குகிற விசா மற்றும் குடியேற்ற ஆதரவு உள்பட வெளிநாட்டு மாணவர்கள் அனைவருக்கும் இலவச மற்றும் அந்தரங்கமான ஆலோசனைச் சேவையும் தரப்படுகிறது.

உன்னதமான விளையாட்டு மற்றும் கலை வசதிகள், 200க்கும் மேற்பட்ட மன்றங்கள் மற்றும் சங்கங்கள் (தடகள விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மெக்சிகன், ஜப்பானீஸ், பெர்சியன், ஐரோப்பிய சங்கங்கள் போன்றவை) மாணவர்கள் தமது நேரத்தை இங்கே மகிழ்ச்சியுடன் அனுபவிக்க உதவுகின்றன!

மேலும் விவரங்களுக்கு எமது வலைதளத்தைப் பார்க்கவும், ஏதேனும் கேள்விகள் இருப்பின் பன்னாட்டு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

வலைதளம்: www.southampton.ac.uk/international

யூ டியூப்: http://www.youtube.com/UoSinternational
டிவிட்டர்: http://twitter.com/UniSotonIntl

பேஸ்புக்: http://www.facebook.com/UosInternationalOffice

*Last updated on 20/08/2010*